திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2020

ஸப்தகிரி இலவச இணைப்பு







நவராத்திரி தேவதைகள் கொலு

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



ஸப்தகிரி இலவச இணைப்பு

அக்டோபர் 2020

மலர்–01 இதழ்–08

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| **இந்துக்கடவுள்கள் : ஆனந்த நிலையம்**<br>- *திருமதி வி. உஷா, திருப்பதி.* | 32 |
| **பன்னிரு ஆழ்வார்கள் : பெரியாழ்வார்**<br>- *திரு. டி.டி. வரதராஜன், சென்னை.* | 34 |
| **கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீகோபால தாசர்**<br>- *திருமதி. டி.எஸ். ராஜலஷ்மி, கேரளா.* | 36 |
| **சித்திரக்கதை : தும்பிமான் கொண்டிக்கு மோட்சம்**<br>*கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.*<br>*தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.*<br>*சித்திரம் : திரு. கெ. துவரகநாத்.* | 38 |
| **நீதிக்கதைகள் : எது நேர்மை!**<br>- *திரு. சத்யதாரா, சென்னை.* | 42 |
| **சிறந்த சிறுவன் : செல்வி. டி.எம். பர்வத வர்தினி** | 44 |
| **புதிர் : வினா–விடை**<br>*திரு.என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.* | 45 |
| **சித்திரம் வரைதல்** | 46 |

முன்னட்டை : ஆனந்த நிலையம்

பின்னட்டை : ஸ்ரீசரஸ்வதி தேவி அலங்காரத்தில் ஸ்ரீபத்மாவதி தாயார்



# ஆனந்த நிலையம்

திருவேங்கடமலையில் நின்றகோலத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு வேண்டும் வரங்களை அள்ளித் தந்து அருள்பாலித்து வருகின்றார் திருவேங்கடமுடையான்.

ஸ்ரீமஹாவிஷ்ணு உலக நன்மைக்காகவும் பக்தர்களுக்காகவும் வைகுண்டத்தை விடுத்து திருமலையில் திருவேங்கடமுடையானாக நிலை பெற்றார். இந்த ஸ்வாமியை கண்டுகளித்தாலோ மனதிற்கு பேரானந்தம் ஏற்படும். பல நாமங்களை உடைய திருவேங்கடமுடையானுக்கு ஆனந்த நிலையன் என்ற பெயரும் உண்டு. ஏன் இப்பெயர் வந்தது என்பதை அறிவோம்!

திருமலையில் திருவேங்கடவன் எழுந்தருளி இருக்கும் கருவறையின் மேற்கூரையே ஆனந்த நிலையம். இது முழுவதும் கல்லால் வேயப்பட்டு பொன்னால் போர்த்தப் பட்டவையாகும். பொதுவாக இறைவன் வீற்றிருக்கும் கருவறையின் மேற்கூரை “விமானம்” என அழைக்கப்படும். அவ்விமானத்திற்கு சிறப்பு பெயர் சூட்டி அழைப்பது வைணவ ஆகம மரபு ஆகும். ஆகையால்தான் இக்கூரைக்கு ஆனந்த நிலையம் என்று பெயர் சூட்டி பெருமைப்படுத்தினர் பெரியோர்.



ஆனந்த நிலையத்தை தொண்டைமான் சக்கரவர்த்தி நிர்மாணித்தார். பூலோக வைகுண்டமாக நிலைபெற்ற இந்த திருத்தலத்தில் திருவேங்கடமுடையான் பத்மாவதி சமேத லக்ஷ்மி தேவியுடன் எழுந்தருளி பக்தர்களுக்கு ஆனந்த தரிசனம் அளிக்கின்றார். ஆனந்த நிலையத்தில் நிவசிப்பதால் “ஆனந்த நிலையன்” என்ற திருநாமத்துடன் அழைக்கப் படுகின்றார். அவ்வாறே ஆனந்த நிலையத்தில் உள்ள விமான வேங்கடஸ்வரரைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மத்வாசாரியரான வியாசராய தீர்த்தர் விமானத்தின் வடகிழக்கு திசையில் இருந்த இறைவனின் சிறு பிரதிமை மீது தியானத்தில் மூழ்கி முக்தியடைந்தார்.

அன்று முதல் அப்பிரதிமை விமான வேங்கேடஸ்வரர் என்று பக்தர்களால் வணங்கப்பட்டு வருகின்றது. விமானத்தின் வடகிழக்கு திசையில் பக்தர்கள் காணும் வண்ணம் ஸ்வாமி கொலுவீற்றுள்ளார். இங்குள்ள ஸ்வாமியைக் தரிசித்தால் மூல மூர்த்தியைக் தரிசித்த பலன் கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. ஆனந்த நிலையத்தில் கொலுவீற்றுள்ள ஸ்ரீவேங்கடேஸ்வரரை தரிசித்து, நாமும் ஆனந்தமடைந்து அருள் பெறுவோம்!

– திருமதி வி. உஷா, திருப்பதி.

வைணவ ஆழ்வார்கள் பரம்பரையில் எட்டாவதாக அவதரித்தவர் பெரியாழ்வார். இவர் கலியுகத்தில் குரோதன வருடத்தில், ஆனி மாத ஸ்வாதி நட்சத்திரத்தில், வேத ஸ்வரூபனான ஸ்ரீகருடனின் அம்சத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீமுகுந்தபட்டர் - பத்மவல்லி தம்பதியினருக்கு ஐந்தாவது புத்திரராக அந்தண குலத்தில் அவதரித்தார். இவ்வாழ்வாரது இயற்பெயர் "விஷ்ணு சித்தர்" என்பதாகும்.

விஷ்ணு சித்தர் எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதில் மிக்க ஆர்வம் காட்டினார். திருமாலுக்குத் திருமாலை (பூமாலை) சாற்றுதலையே சிறந்த கைங்கர்யமாகக் கொண்டு, அதற்கென ஒரு நந்தவனத்தை உருவாக்கி, புஷ்பச் செடிகளைப் பயிரிட்டு வளர்த்து, அம்மலர்களால் அழகிய மாலைகளைக் கட்டி, ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாற்றுவதையே தன் முக்கியப் பணியாக நியமித்துக் கொண்டு பணி புரிந்து வந்தார்.

அச்சமயத்தில் மதுரையை ஆண்டு கொண்டிருந்த "ஸ்ரீவல்லப தேவன்" என்ற அரசனுக்கு "பரத்வமான தெய்வமெது" என்ற சந்தேகம் எழ, தமது மந்திரி செல்வ நம்பியின் ஆலோசனைப்படி ஒரு பெரும் பொற்கிழியைத் தோரண வாயிலில் கட்டி வைத்து, வேதாந்தத்தைக் கொண்டு பரம் பொருளை நிர்ணயம் செய்து பொற்கிழியைப் பெற விரும்புபவர்கள் தம் அரண்மனைக்கு வரலாம் எனப் பறையறிவித்து நாடெங்கும் செய்தியனுப்பினார். பலரும் வந்து சொல்மாரி பொழிந்தும் பொற்கிழி அறுபடவில்லை. தனக்கு ஒன்றுமே




# பெரியாழ்வார்



தெரியாது என எண்ணம் கொண்டிருந்த விஷ்ணுசித்தர் கனவில் வடபெருங்கோவிலு டையான் தோன்றி, அவரை ரச சபை சென்று, தம் ஆசியினால் பர விஷ்ணுவே பரத்வம் என்று வேதங்களை ஆதா ரமாகக் காட்டி நிரூ பித்து அரசனின் சந்தே கத்தைப் போக்குமாறு திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

விஷ்ணு சித்தரும் எம்பெருமான் திருவுள்ளப்படி ஸ்ரீவல்லப தேவன் அரசவைக்குச் சென்று கூடியிருந்த அனைவரும் வாயடைத்துப் போகும்படி வேதாந்தப் பிரமாணங்களைக் கொண்டு, பரத்வமான தெய்வம் விஷ்ணுவே என நிரூபித்த வேளையில், பொற்கிழி தானாகவே அறுபட்டு அவர் கைகளில் விழ, அரசனும் பேராச்சர்யம் அடைந்து மகிழ்ந்து, விஷ்ணு சித்தரைத் தன் பட்டத்து யானை மேல் ஏற்றி பல விருதுகளைக் கூறி நகர் வலம் வரச் செய்தான். வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளந்தன.

இந்த அழகியதொரு காட்சியைக் காண வான்வெளியில் திருமாலவனே கருடாரூடனாய் தேவர்கள் புடைசூழ, விஷ்ணு சித்தருக்கும், அரசனுக்கும், மக்களுக்கும் காட்சியளித்தருளினார். எம்பெருமானுக்கு மக்களின் பார்வையால் கண்ணெச்சில் பட்டு விடப் போகிறதே என்று கவலை கொண்டு, எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடி, அவரை மங்களாசாசனம் செய்தார். எம்பெருமானும் விஷ்ணு சித்தரிடம் “பொங்கும் பரிவு” கொண்டு, “பட்டர் பிரான் – பெரியாழ்வார்” என்று அவரை அழைத்து ஆசி கூறி மறைந்தார். அன்றிலிருந்து அவர் “பெரியாழ்வார்” என்றே அனைவராலும் அழைக்கப்படலானார்.

– திரு. டி.டி. வரதராஜன், சென்னை.

**கன்னட ஹரிதாசர்கள்**

ஸ்ரீ விக்னேஸ்வரின் அம்சமாக ஸ்ரீகோபால தாசர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் ஸ்ரீமுராரி ராயர் மற்றும் திருமதி வெங்கம்மாவின் மகன் ஆவார். பெற்றோர் அவருக்கு பாகண்ணா என்று பெயரிட்டனர். ராய்ச்சூர் மாவட்டம், தேவதுர்கா தாலுக்கா, மொசாரு கல்லேபள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்.

தன் சிறு வயதிலேயே தந்தையை இழந்தார். அவரும் அவரது தாயும் மிகுந்த வறுமையில் வாழ்ந்தனர். அவரது குலதெய்வம் ஸ்ரீநிவாசர். இக்கோயில் உத்தமோர் என்ற இடத்தில் இருந்தது. குழந்தை பருவத்திலிருந்தே அவர் கோயிலுக்குச் சென்று மிகுந்த பக்தியுடன் ஆடிப்பாடுவார். "வெங்கட கிருஷ்ணர்" என்ற புனைப் பெயர் வைத்து சீனிவாச பகவான் மீது பல பக்தி கவிதைகளை இயற்றிக் கொண்டிருந்தார். அவர், தனது சிறு வயதிலிருந்து விடாமல் "காயத்ரி மந்திரத்தை" ஓதிக் கொண்டிருந்தார். அதனால் அவருடைய கவிதை புலமை



# ஸ்ரீகோபால தாசர்

| | |
|---|---|
| ஆங்கிலம் மூலம் | : திருமதி எ. கீதா வீரராகவன் |
| தமிழாக்கம் | : திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி |

மிகச்சிறப்பாக வெளிப்பட்டன. அதனால் அவருக்கு "கடவால்" மன்னரால் சிறப்பு பாராட்டு கிட்டிற்று.

கோபால தாசர் சில காலம் கழித்து "ஸ்ரீவிஜய தாசர்" மூலமாக "ஹரி தாச தீக்ஷை" பெற்றார். பின்னர் அவர் ஸ்ரீஹரி பக்தியின் பாதையை கடுமையாகப் பின்பற்றி நூற்றுக்கணக்கான பக்தி கீர்த்தனைகளையும் இயற்றினார்.

ஸ்ரீவிஜய தாசர் இவரை "கோபால விட்டலா" என்று அழைத்தார். பின்னர் அவர் "கோபால விட்டலா" என்ற பெயரில் கீர்த்தனைகளை இயற்றினார். ஸ்ரீவிஜயதாசர் மற்றும் கோபால தாசர் இணைந்து ஹரிதாச கீர்த்தனைகளை பொதுமக்களிடையே பிரபலப் படுத்தினர். ஹரிதாச இலக்கிய வரலாற்றில் இது ஒரு பொற்காலம். கோபால தாசரின் இலக்கியம் மிகவும் முதிர்ந்த தத்துவம் மற்றும் மிக சிறப்பு வாய்ந்தது. கடவுளுக்கும் மனிதருக்கும் சில கடமைகளையும் தந்திரத்தையும் கொடுப்பது பற்றி விவாதித்தார். இவர் எப்போதும், தன்னுடைய சுயநிலையை விட்டு பகவானின் கைப்பாவையாக வேண்டும் என்று கடவுளிடம் வேண்டுவார்.

ஒரு முறை ஜெகந்நாத தாசர் விஜயதாசரை அவ மதித்தார். ஏனெனில் விஜயதாசர் கன்னடத்தில் தேர்ச்சி பெற்றவர். ஆனால் ஜெகந்நாத தாசர் சமஸ்கிருதத்தில் பண்டிதர். அதனால் அவர் கன்னடத்தை அதிகம் பொருட்படுத்த வில்லை. இதை அறிந்து ஸ்ரீகோபாலதாசர் மிகவும் வருத்த மடைந்து எந்த உணவையும் உட்கொள்ள வில்லை. அதே சமயம், ஜெகந்நாத தாசர் பயங்கரமான வயிற்று வலியால் அவதிப்பட்டார். பின்னர், கோபால தாசரிடம் வந்து மனதார மன்னிப்புக் கேட்டார். கோபால தாசரும் அவரை மன்னித்தார். அது மட்டுமின்றி, "ஹரிதாச தீக்ஷையை" கோபாலதாசரிடம் ஜெகந்நாத தாசர் பெற்றார். கோபால தாசருக்குப் பிறகு ஜெகந்நாத தாசர் தனது இலக்கியப் பணிகளைத் தொடர்ந்தார்.

# சித்திரக்கதை

## தும்பிமான் கொண்டிக்கு மோட்சம்

கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்
சித்திரம் : திரு.கெ. துவாரக நாத்

இராமாநுஜர் சில காலம் திருப்பதியில் வீற்றிருந்தபோது தினமும் அவருக்கு தேவையான பால், தயிர், நெய் போன்றவற்றை தும்பிமான் கொண்டி எனும் பெண்மணிவழங்கி வந்தாள். அதற்கு தகுந்த சன்மானத்தை அளிக்க இராமாநுஜர் அப்பெண்மணியை அழைத்தார்




மோட்சமா?... அது என்னிடமுள்ளது என்று யார் கூறியது?
தாங்கள் ஒரு சீட்டு எழுதி கொடுத்தாலே போதும். ஸ்ரீநிவாசன் எனக்கு மோட்சம் அளிப்பார்
அச்சீட்டில் என்ன எழுத வேண்டும் என்கிறீர்?
எனக்கு மோட்சம் வழங்க வேண்டுமென்று சிபாரிசு பண்ணி எழுதி தாருங்கள் போதும்


அவ்வாறு எழுதி கொடுத்தால் அச்சீட்டினை என்ன செய்வாய்?
அச்சீட்டினை திருமலைக்கு கொண்டு சென்று ஸ்வாமிக்கு காண்பிப்பேன். அவர் தவறாமல் எனக்கு மோட்சம் அளிப்பார்
தும்பிமான் கொண்டி சிறப்பாக பாகவத சேவை செய்தார். ஆதலால் இவளுக்கு மோட்சத்தை அருளுங்கள் என்று இராமானுஜர் சீட்டில் எழுதி அவளிடம் அளித்தார்
அவளுடைய விச்வாசத்தை மெச்சி இராமானுஜர் ஆனந்தமடைந்தார்
ஸ்வாமி! தேவரீரை சேவிக்கிறேன்!




அடுத்த இதழில் திருவேங்கடமுடையானின் மற்றொரு
திவ்ய திருலீலையை படித்து மகிழலாம்...

முற்றும்.

நீதிக்கதைகள்



# எது நேர்மை!

- திரு. சத்யதாரா, சென்னை

“மகதம்” என்ற தேசத்தினை தனநந்தன் என்ற அரசன் ஆண்டு கொடுங்கோலாட்சி நடத்தி வந்தான். அந்த மன்னனிடமிருந்து மக்களை காப்பாற்ற, சாணக்கியர் என்ற ஒரு மஹான் பெரும் புரட்சிப்படை ஒன்றை நிறுவ முயற்சி செய்து வந்தார். புரட்சிப்படையில், நேர்மையும் தைரியமும் கொண்ட இளைஞர்களை சேர்க்க பல முயற்சிகளை எடுத்து வந்தார். ஒரு குருகுலத்தில் பயின்று வெளிவரும் மாணவர்களை சோதித்து தனது படையில் சேர்த்துக்கொள்ள முடிவு செய்து, தலைமைகுருவிடம் உதவிகோரினார். தலைமைகுரு, குருகுலத்தில் பயின்றுவெளிவரும் மாணவர்களில் நேர்மையும் தைரியமும் உள்ள மாணவர்களை சோதனை செய்து அடையாளம் கண்டு உதவுவதாகக் கூறினார்.

பயிற்சி முடித்த மாணவர்கள் விடை பெறும் தருணம். தலைமை குரு மாணவர்களை அழைத்து அவர்களிடம் தாம் விதைகளை கொடுப்பதாகவும், அதை பயிரிடப்பட்டால் அது வளர்ந்து செழிப்பான புஷ்பங்களை வழங்கும் என்றும், மூன்று மாதங்களில் இதை சிறப்பாக பயிர் செய்து நல்ல புஷ்பங்களை கொண்டு வரும் மாணவனுக்கு உன்னதமான பரிசு வழங்கப்படும் என்றும் கூறி மாணவர்களிடம் விதைகளை வழங்கினார்.

விதைகளை பெற்று சென்ற மாணவர்கள் விதைத்து நீரூற்றி பராமரித்தனர். ஆனால் விதைகள் எதுவும் வளரவில்லை. உயிர்பெறவில்லை. பரிசு பெற ஆசைப்பட்டு பல மாணவர்கள் வேறு சில விதைகளை வெளியிலிருந்து வாங்கி, பயிர் செய்து மூன்று மாதங்களில் பூத்துக் குலுங்கும் புஷ்பங்களுடன் தலைமை குருவிடம்திரும்பி வந்தனர்.

தலைமை குரு ஆர்வத்துடன் ஒவ்வொரு மாணவன் கொண்டு வந்த புஷ்பங்களையும் பார்த்தார் பாராட்டினார். ஒரே ஒரு மாணவன் மட்டும் கையில் மண்ணுடன் வந்து.... “தாங்கள் கொடுத்த விதை வளரவே இல்லை, அழுகி விட்டது” என்று கூறி அழுகிய விதையுடன் கூடிய ஒரு பிடி மண்ணை கொண்டு வந்து கொடுத்தான். தலைமை குரு மாணவனை நோக்கி.... அழுகிய விதையுடன் திரும்பி வந்தது ஏன்...? என வினவி னார். “குருவே... தாங்கள் அளித்த விதையினை பயிரிட்டேன். அது தரம் சிதைக்கப்பட்ட விதை” என்று கூறினான்.

தலைமை குருவோ மாணவனை பாராட்டி... “சிறப்பு பரிசு அவனுக்கே” என்று முழங்கினார். தான் கொடுத்த விதைகள் அனைத்தும் சுடுநீரில் வைக்கப்பட்டு சிதைக்கப் பட்டவையே. ஒரே ஒரு மாணவன் மட்டும், நேர்மையாக, உண்மைதனை உரைத்து, தைரியமாக நின்றான். நேர்மைக் கும், பயம் அற்ற தைரியத்திற்கும் அவனே சிறந்த சான்று என்று கூறி சிறப்புப் பரிசினை அவனுக்கே அறிவித்தார்.

சாணக்கியர், அந்த சிறுவனையே தன் புரட்சி படைக்கு தலைமை ஏற்க பயிற்சி அளிக்க விரும்புவதாகக்கூறி, அவனுடைய பெற்றோரின் அனுமதியுடன் அழைத்துச் சென் றார். அந்த சிறுவனே... சாணக்கியரால் வளர்க்கப் பட்டு, புரட்சி படைக்கு தலைமை ஏற்று, பிற்காலத்தில் “சந்திர குப் தன்” என்று அழைக்கப் பட்ட மாமன் னன். எனவே, குழந்தைகளே! நேர்மையே நம்மை உயர்த்தும்!





# சிறந்த சிறுமி

| | |
|---|---|
| பெயர் | - செல்வி. டி.எம். பர்வத வர்தினி |
| பிறந்த தேதி | - 12-05-2006. |
| படிப்பு | - 9ஆம் வகுப்பு. |
| தந்தை பெயர் | - திரு. டி.எஸ். மகேந்திர குமார். |
| தாய் பெயர் | - திருமதி டி.பவானி. |
| பள்ளி | - ஸ்பிரிங் டெல் பப்ளிக் பள்ளி, திருப்பதி. |

**பெற்ற பரிசுகள் :**

- 2017-18 மாவட்ட அளவில் பகவத்கீதை போட்டியில் 2ஆம் பரிசு ஸ்பெல்பி போட்டியில் முதல் பரிசு.
- 2018-19 மாவட்டளவில் பகவத்கீதை போட்டியில் முதல் பரிசு. சரியான உச்சரிப்பு வெளிப்பாடு போட்டியில் முதல் பரிசு, இதர துறைகள் வினா-விடை போட்டியில் முதல் பரிசு.
- 2019-20 பகவத் கீதை - 2ஆம் பரிசு, சரியான உச்சரிப்பு வெளிப் பாடு முதல் பரிசு, இஸ்கான் வாய்மொழி போட்டி முதல் பரிசு, சித்திரம் வரைதல் போட்டியில் 2ஆம் பரிசு, தெலுங்கில் பேச்சுப் போட்டி 3ஆம் பரிசு.
- சிறப்பு திறமைகள் : நாட்டியம், சங்கீதம்.
- பெங்களூர் காளிகாதுர்கா மந்திரத்தில் நாட்டிய நிகழ்ச்சி.
- திருப்பதி சில்பாராமத்தில் நடன நிகழ்ச்சி.
- திருப்பதியில் நடைபெற்ற கார்த்திகை தீபோத்ஸவத்தன்று நாட்டிய நிகழ்ச்சி
- திருப்பதி மாநகராட்சியினர் நடத்திய குழந்தைகள் தின உத்ஸவத்தில் நாட்டிய நிகழ்ச்சி.

புதிர்

# “வினா–விடை”

1. ஸ்ரீஉய்யவந்தாள் என்னும் திருநாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?

அ) திருப்புல்லாணி ஆ)திருமோகூர்

இ) திருமெய்யம் ஈ) திருகூடல்

2. காஞ்சி பூரணர் என்று போற்றப்படுபவர் யார்?

அ) திருமலைநம்பி ஆ)வடுக நம்பி

இ) பெரிய நம்பி ஈ) திருக்கச்சி நம்பி

3. பெருமாளை இராமராக பாவித்து குலசேகராழ்வார் மங்களா சாசனம் செய்த திவ்ய தேசம் எது?

அ) திருப்பதி ஆ)திருவரங்கம்

இ) திருக்கண்ணபுரம் ஈ) திருவெஃகா

4. ஸ்ரீராமாநுஜர் பெருமாளுக்கு தீர்த்த கைங்கர்யம் செய்த திவ்ய தேசம் எது?

அ) திருவரங்கம் ஆ)திருத்தண்கா

இ) திருநீரகம் ஈ) திருக்கச்சி (காஞ்சி)

5. பெரியாழ்வாரின் இயற்பெயர் என்ன?

அ) விப்ர நாராயணர் ஆ)பக்தி சாரர்

இ) விஷ்ணு சித்தர் ஈ) நீலன்

6) பேயாழ்வார் அவதார தலம் எது?

அ) திருமயிலை ஆ) திருக்கடிகை

இ) திருக்கச்சி ஈ) திருவெஃகா

7) முதல் திருவந்தாதியை அருளிச் செய்த ஆழ்வார் யார்?

அ)பொய்கையாழ்வார் ஆ)பூதத்தாழ்வார்

இ) பேயாழ்வார் ஈ) நம்மாழ்வார்

திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

1) இ, 2) ஈ, 3) இ, 4) ஈ, 5) இ, 6) அ, 7) அ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |



தேவதைகள் வேடத்தில் சிறார்கள்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-09-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020



ஸ்ரீசரஸ்வதி தேவி அலங்காரத்தில்
ஸ்ரீபத்மாவதி தாயார்